பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 28 (14—12—67) வியாழன் வெளியூர்: கார்த்திகை 29 (15—12—67) வெள்ளி [இதழ்: 152

லோகியா நினைவுச் சின்னம்---
எழுப்ப அரசு மறுப்பு

"டாக்டர் ராம் மனோகர் லோகியா வாழ்ந்த புதுடில்லி இல்லத்தை, நினைவுச் சின்னமாக எழுப்புவதற்காக சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஒதுக்கித் தருமாறு மத்திய அரசுக்கு ராஜ் நாராயண் என்ற உறுப்பினரிடமிருந்து வந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதற்கில்லை"

என, வீட்டு வசதித்துறை அமைச்சர் ஜெகன்னாத ராவ், மக்களவையில் தெரிவித்திருக்கிறார்.

மக்களவையில் முரசொலி மாறன் முதல் முழக்கம்

கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை எதிர்ப்போம்!

அந்நிய மொழியான இந்தியைப் புகுத்தவிடோம்!

"மொழிப் போட்டியை உருவாக்கும் மசோதா இது; மத்தியப் பிரதேசத்திலோ, உத்தரப் பிரதேசத்திலோ இந்தி வருவதை நாங்கள் எதிர்க்கவில்லை; ஆனால் எங்கள் கவலையெல்லாம் மத்திய அரசின்பால்தான்! மத்திய அரசில் எங்களுக்கும் உரிமை உண்டு! இந்திக்காரர்களுக்கு மட்டும் அங்கு ஏகபோக உரிமை இல்லை! ஒன்றுபட்ட வாழ்வின் அனுகூலங்களில் நாங்களும் பங்குதாரர்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

"ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதால் எங்களுக்கு அனுகூலமோ, இந்திக்காரர்களுக்கு பிரதிகூலமோ இல்லை! ஆனால், அந்த இடத்தில் இந்தி வந்தால், இந்திக்காரர்களுக்கு அனுகூலம்—எங்களுக்குப் பிரதிகூலம்; இது, ஜனநாயக மறுப்பு அல்லவா? ஜனநாயகவாதிகளே—சிந்தித்துப் பாருங்கள்!

"இந்தி பேசும் பெற்றோருக்குப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால்—தாய்ப் பாலுடன் கலந்து இந்தியைக் கற்றுக்கொண்ட பிறகு—எங்களைப் போட்டிக்கு அழைக்கிறீர்கள்! இது மொழிப் பிரபுத்துவம் அல்லவா? சோஷலிசவாதிகளே—சிந்தித்துப் பாருங்கள்!

"இந்தி மொழி 'ராணி' என்றும், பிற மொழிகள் 'சக இராணிகள்' என்றும் இங்கே உறுப்பினரொருவர் வர்ணித்துக் கூறினார்; ஆனால் அரசியல் சட்டம் தரும் தகுதிப்படி பார்த்தால், இந்தி எனும் இராணி, பிரிட்டிஷ் இராணியைவிட அதிகாரம் வாய்ந்தவள்! அமெரிக்கக் குடியரசுத் தலைவரைவிட அனைத்து வல்லமை பெற்றவள்! ஆனால் மற்ற இந்திய மொழிகளோ, சீட்டுக்கட்டிலுள்ள இராணிகளைப்போல் கருதப்படுகின்றன!

"உலகில் பல நாடுகள் இதுவரை ஆங்கிலத்தை ஒதுக்கிவைத்திருந்தாலும், இப்போது அந்த ஆங்கிலத்தை விரும்பி ஏற்கத் துவங்கிவிட்டன; ஆனால் இந்திய அரசுதான், நெருப்புக் கோழிபோல்—'இந்தி' எனும் மணலுக்குள்—தன் தலையைப் புதைத்துக் கொண்டிருக்கிறது!

"ஆங்கிலம் எங்களுக்கு அந்நிய மொழி; அதை எங்கள்மீது புகுத்த அனுமதிக்கமாட்டோம்' என்று உறுப்பினரொருவர் கூறினார்; அதே வாதத்தைத் திருப்பிக் கூறுகிறேன்—'இந்தியும் எங்களுக்கு அந்நிய மொழி; அந்த மொழியை எங்கள் மீது புகுத்த அனுமதிக்கமாட்டோம்' என்று!

"மொழிக் கிளர்ச்சியின்போது எங்கள் நாட்டில் தீக்குளித்து இறந்தார்கள்; ஒருவரல்லர்—இருவரல்லர்—8-பேர் தீக்குளித்தார்கள்—தங்கள் மொழி உணர்வை உலகிற்குக் காட்ட! இந்திக்காரர்களுக்குப் பெரிய மனது -- விசால மனது இருக்குமானால், அந்தத் தியாகிகளின் பெயரால் கேட்கிறேன்—எங்களுக்குரிய உரிமை சனநாயக உரிமை -- மொழி உரிமை எங்களுக்குக் கிடைத்தே ஆகவேண்டும்! இந்த மசோதா போதாது - இது போதாது—இன்னும் வேண்டும்!

"அந்தத் தியாகிகளின் பெயரால் ஆணையிட்டுக் கூறுகிறேன்—மகாத்மா காந்தி பிரிட்டிஷ் காரர்களை எதிர்த்து ஓயாது போராடியதுபோல், தமிழகத்தில், கடைசித் தமிழனின் கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரையில், இத்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிக் கொண்டிருப்போம்! இது நிச்சயம்!"

இவ்வாறு முரசொலி மாறன் அவர்கள், நாடாளுமன்ற மக்களவையில், ஆட்சிமொழி மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார். அவரது உரையின் விவரம் நாளை வெளிவரும்:—

சபாஷ் -- சவாண் அவர்களே!

இந்தி வேண்டாமென்பவர்களும் இதனைத்தான் கூறுகிறார்கள்!

"சரித்திரத்திலேயே முதன் முறையாக நாடு முழுவதும் ஒரு ஆட்சி மொழி(இந்தி)யைப் பயன்படுத்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது!

"இது ஒரு குறிப்பிடத்தக்க—சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டம்; உறுப்பினர்கள் இதனை உணரவேண்டும்."

—ஆட்சி மொழி மசோதா முதல் விவாதக் கட்ட முடிவில் உள்துறை அமைச்சர் சவாண் உரையின் இறுதிப் பகுதி

மழை வெள்ளத்தால் 200 சாலைகள் பாதிப்பு

கடந்த கிழமையில் பெய்த மழையின் விளைவாகத் தமிழகம் முழுவதிலும் 200 சாலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தமிழக அரசின் நெடுவழித் துறைக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சென்னை—மகாபலிபுரம் இடையேயுள்ள கடலோரச் சாலை படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது; இந்தச் சாலையின் வழியாகத்தான் கல்பாக்கம் அணுமின் சார நிலையத்துக்கு இயந்திரங்கள் ஏற்றிவரப்படுகின்றன.

இராமநாதபுர மாவட்டத்தில், இராஜசிங்கமங்கலம் ஏரி உட்படப் பல ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டன.

இந்தி பேசாத மக்களின் நியாயமான கோரிக்கையை மதிக்கவில்லை இந்திரா!

இந்தி ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பணிந்துவிட்டார்!

க. அன்பழகன் விளக்க அறிக்கை

புதுடில்லி, டிச. 13—

நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழு ஏற்றுக் கொண்டுள்ள திருத்தங்களுடன் ஆட்சிமொழித் திருத்த மசோதாவை நிறைவேற்ற முற்பட்டால், அதனை எதிர்த்து வாக்களிப்பதென இன்று பிற்பகல், நாடாளுமன்ற தி. மு. க. கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இதன்படி மசோதா போது அங்கீகாரத்துக்கு வந்தபோது மக்களவையில் தி. மு. க. உறுப்பினர்கள் எதிர்த்தே வாக்களித்தனர்.)

இது குறித்து, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"இந்தி பேசாத மக்களின் நலனை முன்னிட்டு, ஆட்சிமொழித் திருத்த மசோதாவை எதிர்ப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். மசோதாவை எச்சரிக்கையாக ஆராய்ந்த பின்னரே இந்த முடிவுக்கு வந்துள்ளோம்.

மத்திய அரசின் ஆட்சிமொழி பற்றிய தி. மு. க. கொள்கை, ஏற்கனவே நாட்டு மக்களுக்கு தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஆட்சிமொழி பற்றிய கொள்கையை மறுஆய்வு செய்ய வேண்டும் என்பதும், இதற்காக அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும் என்பதும் இன்றியமையாததாகும்.

இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா, எங்களுக்கு மனநிறைவளிக்கக் கூடியதாக இல்லை.

பண்டித நேருவால் வழங்கப்பட்டு—லால்பகதூர் சாஸ்திரியால் உறுதி செய்யப்பட்ட உறுதிமொழியின் வேகத்தை இந்த மசோதா தணித்து விடுவதாகவே நாங்கள் கருதுகிறோம்.

இந்தி ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகளுக்குத் தலைமையமைச்சர் ஆட்பட்டுவிட்டீ செய்தி அறிந்து உண்மையிலேயே அதிர்ச்சியும், வியப்பு மடைகிறோம்!

இம்மசோதாவை இப்போது உள்ளபடியே நிறைவேற்றி வைத்தால்தான், குறைந்தபட்சம் தற்காலிகமாக மனச்சாந்தியாவது ஏற்படும் என்றும், நல்லெண்ணத்தின் அறிகுறியாக இதை அப்படியே நிறைவேற்ற வேண்டும் என்றும்தான் தி. மு. கழகம், தலைமையமைச்சரிடம் கோரியிருந்தது; ஆனால் தலைமையமைச்சரோ, தம் தந்தையார் எந்த உணர்ச்சியில் அந்த உறுதிமொழியைத் தந்தாரோ அந்த உணர்ச்சியை அடியோடு கொன்றுவிடும்வகையில்—தி. மு. க. எதிர்பார்த்ததற்கு மாறாக—திருத்தங்களை ஏற்றுக்கொண்டதாகத் திடீரெனச் செய்தி வெளியாகியுள்ளது!

தலைமையமைச்சர் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டிருப்பது, இந்தி பேசாத மக்களின் நியாயமான கோரிக்கையைத் துளியும் மதிக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியிருப்பதுடன், காங்கிரசுத் தலைவர் காமராசரின் விருப்பத்தையும் எச்சரிக்கையையும்கூடச் சட்டை செய்யாமல் காற்றில் பறக்க விட்டுவிட்டார் என்பதையே காட்டுகிறது."

ஆட்சி மொழித் திருத்த மசோதா

அண்ணா அறிவிப்பு

வேலூர், டிச. 13—

"ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவின் தன்மை குறைக்கப்படுமானால் தி. மு. கழகம் அதனை ஆதரித்து வாக்களிக்காது"

என்று, அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு இன்று தெரிவித்தார்கள்.

"இப்போதுள்ள வடிவத்தில்கூட இந்த மசோதா, முழு அளவில் எங்களுக்கு மன நிறைவை அளிக்கவில்லை; நேருவின் உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் இந்த மசோதா உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டதால் நாங்கள் அதனைப் பரிசீலனை செய்ய ஆயத்தமாக இருந்தோம்"

என்று அண்ணா அவர்கள் மேலும் கூறினார்கள்.

மூடப்பட்ட ஆலை திறக்கப்படுகிறது!

கோவை, டிச. 13—

பழனியில் உள்ள முருகன் பஞ்சாலை இன்னும் 10 நாட்களில் திறக்கப்படலாம்.

ஆலையைத் திறப்பது தொடர்பாகத் திண்டுக்கல்லில் ஆலை நிர்வாகத்துக்கும் — தொழிற்சங்கத்துக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

இந்த ஆலை, கடந்த 4 மாத காலமாக மூடிக் கிடந்தது. மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறக்கச் செய்வதில் தமிழக அரசு மிகுந்த அக்கறை காட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

காதில் விழுந்தது!

"இந்தி மொழிக்கு முட்டுக் கொடுத்து இந்திரா அம்மையார் பேசியிருப்பதைப் பார்த்தாயா?"

"ஆமாம்; குஷ்டரோகியை வண்டியில்வைத்துத் தெருவில் இழுத்துச் சென்று கொண்டே 'துட்டு' சம்பாதிக்கும் பிச்சைக்காரப் பாணியில் — அனுதாபத்தைத் தூண்டும் விதத்தில் பேசியிருக்கிறார்...!"

"நான் அதை மட்டும் சொல்லவில்லை; இந்திக்குப் புதுப் பெயர் ஒன்று கொடுத்திருக்கிறாரே— அதைப்பற்றித்தான் கேட்டேன்."

"என்ன அது?—'இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி' என்றாரா?"

"இல்லை."

"'இந்திதான் நாட்டின் ஆட்சி மொழி' என்றாரா?"

"கிடையாது."

"'இந்திதான் நமது இணைப்பு மொழி' என்றாரா?"

"அதுவும் இல்லை."

"அப்புறம்...?"

"நீ இப்போது சொன்ன மூன்றையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்; அதாவது, இந்திதான் இந்த நாட்டின் 'தேசிய—இணைப்பு—ஆட்சி' மொழியாம்."

"ஆமாம்; இதில் புதிதாகக் கவனிக்க வேண்டியது நிறைய இருக்கும்போல் இருக்கிறதே!"

"அதற்காகத்தானே உன்னிடம் இத்தனைப் பேசினேன்."

விலையேற்றத்திற்கு டில்லியே காரணம்!

உ. பி. அமைச்சர் குற்றச்சாட்டு

இலட்சுமணபுரி, டிச. 12—

"உத்தரப் பிரதேசத்தில் பல்வேறு பண்டங்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு, மத்திய அரசின் கொள்கைகளே காரணம்"

என்று உ. பி. கூட்டுறவுத் துறை அமைச்சர் ஜி. பி. சிங், செய்தியாளரிடம் கூறினார்.

"விலைவாசிகளைக் குறைக்க, மாநில அரசு விரும்புகிறது; ஆனால், மத்திய அரசு, தன் உறுதி மொழிகளை நிறைவேற்றாததால், இம்முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது" என்று அவர் சொன்னார்.

"மத்திய அரசின் அனுமதியின்றி, பண்டங்களின் விலைகளை நிர்ணயம் செய்ய முடியாது; ஆனால், இதை இந்திய அரசு விரும்பவில்லை" என்று அவர் சொன்னார்.

கட்சி சார்பற்ற முறையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்

அண்ணா கருத்தை ஏற்க காங்கிரசு அமைச்சர் மறுப்பு

சென்னை, டிச. 12—

"உள்ளாட்சி மன்றத் தேர்தலை கட்சி சார்பற்ற முறையில் நடத்த முடியாது"

என்று, டெல்லி அமைச்சர் சத்திய நாராயண சின்கா இங்கு தெரிவித்தார்.

"கட்சி சார்பற்ற முறையில் உள்ளாட்சி மன்றங்களின் தேர்தலை நடத்த வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்துப் பற்றி செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கே அவர் இவ்வாறு பதிலளித்திருக்கிறார்.

பதிவேடு

போரின் விலை!

வியட்நாம் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, இதுவரையில் 15,000 போர் வீரர்களை இழந்திருக்கிறது!

1,00,000 அமெரிக்க இராணுவத்தினர் காயமடைந்திருக்கின்றனர்!

அமெரிக்கா வியட்நாமுக்காக மொத்தமாக மாதமொன்றுக்குச் செலவிடும் தொகை 2 பில்லியன் டாலர்கள்—அதாவது ரூ. 1,500 கோடி!

★

தமிழகத்தின் பெருமை!

இந்தியாவில் உள்ள மொத்த சட்டமன்ற உறுப்பினர்களில் ஒன்பது சதவிகிதம் பேர் கட்சி மாறியவர்கள்!

கட்சி மாற்றமே நடைபெறாத இந்தியாவின் மாநிலங்கள் மொத்தமே நான்குதான்! கேரளம், மகாராட்டிரம், நாகாலாந்து, தமிழகம் ஆகியன அவை!

கிராமங்களுக்கு மின் வசதி

சென்னை, டிச. 12—

"கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தருவதில், தமிழகம் முன்னணியில் இருக்கிறது"

என்று தமிழக மின்கழகத் தலைவர் வி. பி. அப்பாதுரை, செய்தியாளரிடம் கூறினார். இத்தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழ்நாட்டில் 27,330 கிராமங்களுக்கு இதுவரையில் மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 3.23 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

"1966—67-ம் ஆண்டில் மட்டும் 2,800 கிராமங்களுக்கும், 33,000 பம்பு செட்டுகளுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

"ஓராண்டில் 50,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இது, பம்பு செட்டுகள் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது.

"கடந்த 9 மாதங்களில் மட்டும் 33,000 பம்பு செட்டுகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது."

காங்கிரசல்லாத முதலமைச்சர்கள் மாநாடு

கல்கத்தா, டிச. 13—

"காங்கிரசு அல்லாத முதலமைச்சர்கள் மாநாடு இம்மாத இறுதியில் கல்கத்தாவில் நடைபெறக்கூடும்" என்று, மேற்கு வங்க ஐக்கிய முன்னணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

மேற்கு வங்காளம், அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அமைச்சரவைகள் கவிழ்க்கப்பட்டது குறித்து இம்மாநாடு பரிசீலனை செய்யும்.

கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, இம்மாநாட்டைக் கூட்ட ஏற்கனவே முயற்சி எடுத்துவருகிறார். மேற்கு வங்கம், அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் முன்னாள் முதலமைச்சர்கள் உள்பட காங்கிரசு அல்லாத முதலமைச்சர்களுக்கு அவர் அழைப்பு அனுப்பியுள்ளார்.

மத்தியப் பிரதேச முதலமைச்சர், தாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

திரு.வி.கே. கிருஷ்ண மேனனும், மற்றும் பல முக்கியத் தலைவர்களும் இம்மாநாட்டுக்கு அழைக்கப்படுவர் எனத் தெரிகிறது.

சின்ன விஷயம் -- பேயாட்டம்!

ஒரு சின்ன விஷயம் உங்களுக்குத் தெரியுமா?—

"காந்தியார்தான், 'இந்தி' தேசிய மொழி ஆக்கப்பட்டதற்குக் காரணம்" என்கிறார்கள் அல்லவா?—'அது எப்படி' என்று விளக்குகிறார் பாருங்கள், திருவாளர் ஆசார்யா கிருபளானி:—

"தென் ஆப்பிரிக்க மண்ணில் காந்தியார் தங்கியிருந்த நாட்களில், அங்கே இந்தியாவின் பல பாகங்களில் (!?) இருந்துவந்தவர்கள், இந்துஸ்தானி (இந்தி அல்ல) பேசிப் பழகுவதையும், சுமுகமாக வாழ்வதையும் பார்த்தார்; அதனால்தான் காந்தியார், இந்தியை (!?) ஆதரித்தார்."

கவனித்தீர்களா?—'இந்தியர்கள் அனைவரும் 'இந்துஸ்தானி' பேசினார்களாம்! அதனால் காந்தியார், 'இந்தி'யை ஆதரித்தாராம்! எப்படி இருக்கிறது!

தென் ஆப்பிரிக்கா பக்கம் சென்ற காந்தியார், மலேயா—பர்மா பகுதிகளுக்குச் சென்றிருந்தால், அங்கே பெரும்பாலான இந்தியர், அந்தக் காலத்தில், தமிழில் பேசி அமைதியாக—இணக்கமாக வாழ்ந்ததைக் கண்டிருப்பார்!

இதுதான் காந்தியார் இந்துஸ்தானியைப் (கவனிக்க—இந்தி அல்ல) பொது மொழியாக்கிட எண்ணிய காரணம் என்றால், 'காந்தியார், பெரிய தவறு செய்தவர் ஆவார்' என்பதை, அடக்கத்துடன் சொல்லியே தீரவேண்டும்!

'மகாதேவரே ஆடும் இடம் என்கிறபோது, பேய் ஆடாமலா போகும்' என்பார்கள்! காந்தியாரே இந்துஸ்தானிக்கு ஆதரவாக நின்றார் என்றால், இந்திப் பேய்கள் ஆட்டம் போடாமலா போகும்?

உள்ளனும் கள்ளனும் கூடினால், விடிகிற மட்டும் திருடலாமே! அதுதானே இந்திய அரசின் நிலைமை!

இந்திய அரசின் மேல்நிலையில் உள்ளவர்கள், 'இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றிட இந்தி ஒன்றே வழி' என்று நம்புகிறார்கள்! இந்திக்காரர்களோ, 'தம் தாய்மொழி எப்படியாவது தனி ஆட்சிமொழி ஆகிட வேண்டும்' என்ற அற்பக் கனவு காணுகிறார்கள்!

இரண்டும் சேர்ந்தால் என்ன ஆவது?—உள்ளனும் கள்ளனும் கூடிய கதைதான்! வளமிக்க தாய்மொழிகளைச் சூறையிட முயலும் சூதுத் திட்டம் இது!

புத்தியற்றவற்றவர்கள் என்னதான் பக்தியாய்ச் செய்தாலும், அது விபரீதமாகவே முடியும் என்பதற்கு இந்த ஒரு பிரச்சினை போதுமே—எடுத்துக்காட்ட!

இந்த அழகிலே, தாய்மொழிகளுக்காகவே இந்திக்கார வெறியர்கள் பாடுபடுவதைப்போலப் பேசி, ஊரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்!

"எப்படியும் இந்திதான் ஆட்சிமொழி ஆகப் போகிறது; ஆனால் அது, ஆங்கிலத்தின் இடத்தை ஏற்குமேயன்றி, தாய்மொழிகளின் இடத்தையன்று"—

இந்த மாதம் 11-ந் தேதி, நாடாளுமன்றத்தில், நா நயத்தோடு சுசிலா நய்யார் பேசியது இது!

அதே நாளில் அதே மன்றத்தில் பேசிய ஆச்சாரிய கிருபளானி என்ன சொன்னார் தெரியுமா?—

"ஆங்கிலத்தின் இடத்தை இந்திய மொழிகள் விரைவில் கைப்பற்றிவிடும்; முடிவில் இந்திதான் ஆட்சி மொழி; அதில் சந்தேகம் எதற்கு?"

இதில், எதை நம்புவது?

"ஆங்கிலத்தின் இடத்தை இந்தி கைப்பற்றும்" என்கிறார் சுசிலா நய்யார்!

"ஆங்கிலத்தின் இடத்தை இந்திய மொழிகள் கைப்பற்றும்" என்கிறார் கிருபளானி!

எது உண்மை? இந்தியை வரவேற்பவர்களின் உள்ளத்தில் உள்ளபடி உள்ளது என்ன?

'இந்தி, இந்திய மொழிதானே?' என்றால், அது விதண்டாவாதம்!

மல்லுக்கட்டிப் பிடுங்கினாலும் தாய்மொழிகளுக்குத் தரவேண்டிய இடத்தைத் தராதவர்கள், வலுவில் அழைத்துத் தாய்மொழிகளைக் கொலுவேற்றுவார்களாம்? ஆனால், அதை ஏற்கவோ மறுக்கவோ நமக்கு உரிமை இல்லை என்பது போல வேறு பேசுகிறார்கள்!

"மத்திய அரசின் சட்டமியற்றும் உரிமையில் மாநில அரசுகள் குறுக்கிடுவானேன்?"

என்று இந்தி வெறியர் பிரகாஷ்வீர் சாஸ்திரி, ஆத்திரத்தோடு நாடாளுமன்றத்தில் பேசியமைக்குக் காரணம் என்ன?

தன்னைத்தானே கட்டக் கயிறு கொடுப்பதுபோல், நாம், இந்தியை எதிர்ப்பின்றி அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! இல்லாவிட்டால்.....!

"இந்தியை எதிர்த்திட ஏது உரிமை?" என்று எகத்தாளமாகப் பேசினாரே, ஆந்திரத்தில்—மொரார்ஜி தேசாய்!

அப்படியானால், முதலில் உரிமையை விமர்சிக்க வேண்டும்—வரையறுக்க வேண்டும்.

'மகாதேவரே ஆடினார்' என்று—காலம்—இடம் தெரியாமல், இந்தப் பேய்கள் ஆடினால், முதலுக்கே மோசந்தான்!

—பூரணன்

அண்ணா வழிநின்று அமைதி காப்பீர்!

கழக மாணவர்களுக்கு தி. மா. மு. க. பொதுச்செயலாளர் வேண்டுகோள்

புதுடில்லி, டிச. 7—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., மாணவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

"மாணவ நண்பர்களுக்கு என் வணக்கமும், வேண்டுகோளும்.

நாடாளுமன்றத்தில் ஆட்சி மொழித் திருத்த மசோதா, பல இடுக்கண்களுக்கிடையில் விவாதத்திற்கு வந்திருப்பதை அறிவீர்கள். இம்மசோதா இந்தி பேசாத மக்களுடைய தேவைகளை முழுவதும் நிறைவு செய்யவில்லை என்பதற்கு நம்முடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பொழுது நிறைவேற இருக்கின்ற ஆட்சிமொழித் திருத்த மசோதாவையும் சிதைக்கப் பலர் திட்டமிடுகிறார்கள்.

நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர்கள், அண்ணா அவர்களின் சீரிய ஆலோசனையுடன்—இந்தி பேசாத மக்களுக்கு வழிவகை செய்யும் சில திருத்தங்களுடன் — 'சிதைவு'கள் ஏற்படாதவாறு இருக்கத் தங்களுடைய சாதுர்யங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இந்தச் சமயத்தில் நாம் இதைத்தான் செய்து முடிக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள், சனநாயக மாணவர் மாநாட்டு உரையிலும், நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத்தில் நவம்பர் திங்கள் 29-ம் நாள் ஆட்சி மொழி பற்றி ஆற்றிய உரையிலும், தாமும் தம் கட்சியும் மொழி காக்க எந்தவிதத் தியாகத்தையும் ஈடுசெய்ய இருப்பதையும், ஆட்சிமொழி பற்றியும் மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்கள். இதைவிட அதிகமாக வேறு எந்த முதலமைச்சரும், மாணவருடைய நன்மைக்காகவும், மொழி காக்கவும் முன்வர முடியாது.

மாணவத் தோழர்களே! இந்த நேரத்தில் நீங்களெல்லாம் அமைதியைக் கடைபிடித்து—அண்ணா வழிநின்று—உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி—நிதானமாகக் காரியத்தில் ஈடுபடக் காத்திருக்க வேண்டுகிறேன். இந்தி பேசும் மாநிலங்களைப் பின்பற்றாமல் அமைதியைக் கடைபிடிக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன்."

வேலையிழந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை!

அமைச்சர் கே. ஏ. மதியழகன் உறுதிமொழி

கோவை, டிச. 12—

கோவையில் மூடப்பட்ட ஆலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்குத் தமிழக அரசு வழங்கிய உதவிப் பணத்தை உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று வழங்கினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் உறுதிமொழி யளித்தபடி வேலையிழந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டுத் தமிழக அரசு ரூ. 2 இலட்சம் அளித்தது; அதனை, வேலையிழந்து தவிக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பகிர்ந்து (ஆளுக்கு ரூ. 40 வீதம்) அளித்தார் — அமைச்சர் மதியழகன்.

அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"இந்த அரசு தொழிலாளர்களுக்குச் செய்த இந்த உதவி மூலம், இது, 'தொழிலாளர் அரசு' என்பதை உணரலாம்.

"வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேறு வேலை தேடிக்கொடுக்க முயற்சி செய்வோம்; அதற்கான ஏற்பாடுகளை அரசு உடனே செய்யும்."

வழக்கறிஞர் என்.வி.என். சோமு

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களின் மகன் என்.வி.என். சோமு, சட்டத் தேர்வில் (B.L.) வெற்றிபெற்று, வழக்கறிஞராகியிருக்கிறார்.

மலேசியத் தமிழ் மாணவர்களுக்கு உதவிப் பணம்!

தமிழக அரசு தருகிறது

சென்னை, டிச. 13—மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் குடியேறிய தமிழ் மாணவர்கள், புகுமுக வகுப்பு மட்டத்தில் தமிழ் கற்பதற்கு, அத்த கல்வியாண்டி லிருந்து இருவருக்குப் பண உதவி அளிப்பதென்று தமிழக அரசு முடிவெடுத்திருக்கிறது.

ஆண்டிற்கு ரூ. 2,000 உதவி செய்யப்படும். இதைப் பெறும் மாணவர், சிறந்த முறையில் உயர்ந்த சாதனையைக் காட்டினால், பட்டப் படிப்பிற்கும் பண உதவி கிடைக்கும்.

இங்கு சனவரி 3-ம் நாள் தொடங்கவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தினவாக பண உதவி வழங்கப்படுகிறது.

பள்ளியாசிரியர் வேலைச் சுமை குறைக்கப்பட்டது

கல்வித் துறைக்கு அமைச்சர் வழங்கும் புத்தாண்டுப் பரிசு

8—12—67-ல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அறையில் நடந்த ஒரு முக்கியமான ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற மேலவை உறுப்பினர், அறிவுமகன், தென்னிந்திய ஆசிரிய சங்கத் தலைவர் ஏ. கே. சீதாராமன், பொதுச்செயலாளர் மரியப் பிரகாசம், ஆசிரியர் சங்கத் தலைவர் சண்முகம், துணைத் தலைவர் சீதரன், தலைமையாசிரியர் மாநாட்டுத் தலைவர் நரசிம்மன், பிராங்க் துரைசாமி, மற்றும் பல தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கல்வித் துறைச் செயலாளரும், தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநரும், மற்றும் உயர் அலுவலர்களும் உடனிருந்தார்கள்.

விவாதத்திற்குரிய முக்கியப் பிரச்சினையாக உயர்நிலைப் பள்ளிகளில் வாரத்தில் 40 பாடம் கற்பிக்கும் நேரப் பிரிவுகளாக உயர்த்தப்பட்டதால் ஏற்பட்டதன் சங்கடங்கள் ஆராயப்பட்டன.

இந்தக் கூடுதலின் விளைவாகக் கல்வித்தரத்தில் உயர்வு காணப்படவில்லை; ஆனால், கல்வித் திறன் குறைந்ததாக ஆசிரியத் தலைவர்களை கருத்தறிவித்தனர்.

அது தவிர, ஆசிரியர்கட்கும்—மாணவர்சட்கும் ஏற்பட்ட வினவுகள் ஒரு பெரும் சுமையாக இருந்தன.

இப்படிப்பட்ட கல்வித் தரக் குறைவை வினவித்துக்கொண்டிருந்த இந்தத் திட்டத்தை மாற்றியே தீரவேண்டுமென்று சட்டமன்ற மேலவை உறுப்பினராகிய (ஆசிரியர் பிரதிநிதி) க. அறிவழகன் தெரிவித்தார்; ஆசிரியர் சங்கத் தலைவர்களால் வற்புறுத்தப்பட்ட இந்த மாற்றத்தை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும் கூறினார்.

நீ மாண்புமிகு கல்வி அமைச்சர் இதனை ஒத்துக்கொண்டு, 'வருகிற சனவரி மாதம் முதற்கொண்டு 35 பாட நேரப் பிரிவே வேலைகளே இருக்கும்' என்றறிவித்தார்கள்.

இதற்காக உடனடியாக ஆணையிடும்படி நடவடிக்கை மேற்கொள்ளும்படி கல்வி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

இம்மாதிரி, கூட்டிய பாடப் பிரிவுகளைக் குறைத்து இருப்பது அனைவராலும் வரவேற்கப்பட்டது. இது கல்வியில் அமைச்சருக்குள்ள பெருநாட்டத்தைக் காட்டுவதாக க. அறிவழகன் எம்.எல்.சி. கூறினார்..

ஒரு நாளைக்கு 5 மணி நேரம்—ஒரு வாரத்திற்கு 5 நாட்கள்—ஓராண்டுக்கு 200க் ர்கள்—ஆக போதனை இருக்கும்.

இறுதியாகத் தலைமையாசிரியர் மாநாட்டுத் தலைவர் நரசிம்மன் நன்றி கூறினார்.

அலை அடித்தபோது உயரே ஏறினர்! அலை மறைந்ததும் கீழே வருகிறார்!

நம்பிக்கைக்கும் பாத்திரமாகவில்லை--- பதவிக் காலத்தில் நல்லனவும் தோன்றவில்லை!

தலைமையமைச்சர்களுடன் கருத்துப் பிளவு--தொண்டர்களுடன் தொடர்பற்றதன்மை!

காமராசரின் கட்சித் தலைமை -- ஓர் அரசியல் 'வெத்து வேட்டே'!

"அரசியல் என்பதே, நிலையற்றதுதான்—எதிர்பாராதவைகளைக் கொண்டதுதான்!

"ஒரு சி. பி. குப்தாவும், ஒரு டி. பி. மிஸ்ராவும், தாங்கள் மீண்டும் பதவிக்கு வருவதற்கு முன்னர், பத்துப் பன்னிரண்டு ஆண்டுவரையிலேகூட, 'வெறுமை'யில் அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள்!

"அதுபோல் காமராசரும், 'அடுத்து ஒரு தடவை பதவிக்கு வரக்கூடாதா' எனக் கேட்கலாம்!

"ஆனால், இன்றுவரையில் உள்ள நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது, ஓராண்டுக்கு முன்னர்கூட, 'காலத்தின் காலவர்' என்று ஏத்திப் புகழப்பட்ட அந்த உருவம், இப்போது, ஒரு 'வேற்று வேட்டாக'த்தான் மாறிவிட்டிருக்கிறது!

"முன்னணித் தலைவர்கள் அதிகம்—என்று சொல்லமுடியாத இந்தியா போன்ற நாட்டில், காமராசரின் சரிவு ஒரு வருத்தத்தக்க நிலைதான்"

என்று, பிரபல அரசியல் விமர்சகரான இந்தர் மல்ஹோத்ரா, கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸ்டேட்ஸ்மன்' 7—12—67-ம் நாள் இதழில், "காங்கிரசின் 'காலத்தின் காவலர்' ஏமாற்றத்தைத் தருகிறார்" என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்; அவரது கருத்துக்களின் மற்றையப் பகுதிகள் பின்வருமாறு:—

காமராசரது உண்மை நிலைக்கும் அப்பாற்பட்டு அவரை ஒரு ஒப்பற்ற தலைவராக ஒப்பனை செய்து காட்டியதுதான், இன்றைய அவரது சரிவுக்கு ஒரு முக்கியமான காரணம்! தனிப்பட்ட வகையில் நில தகுநிகள் அவரிடம் இருந்த ஒரு காரணத்தினாலேயே அவரைத் தலைவராக 'மேக்-அப்' செய்து, செயற்கை ஒளியும் கூட்டினர் சிலர்!

ஒரு தனி அறையில் டல தலைவர்களுக்கு மத்தியில் காணப்படும் அரசது சாமான்தியம், வெளியே கட்சித் தொண்டர்களிடையே அல்லது அதற்கும் மேலாக மக்களிடையே காணப்படட்து கிடையாது!

தமிழகத்தில், 'ஒரு மக்கள் தலைவர்' எனப் புகழப்பட்ட காமராசர், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமைக்கு வந்தவுடன் காணப்பட்ட போக்கு மிகவும் விசித்திரமானதே! தேசிய அளவில்—கட்சித் தொண்டர்களிடையே உழைப்பையும் ஆர்வத்தையும் ஊக்குவிப்பதில் காமராசர், உரிய செயல் எதனையும் செய்யவில்லை!

அதுமட்டுமல்ல; இதுவரை எந்தக் காங்கிரசுத் தலைவரின் காலத்திலும் காணப்படாத அளவுக்குப் புதுடில்லியிலுள்ள கட்சி அலுவலகம், காமராசரின் பதவிக் காலத்தின்போதுதான் சோம்பிக் கிடந்திருக்கிறது.

காமராசரின் நான்காண்டுக்காலத் தலைமைப் பதவி நாட்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மிஞ்சுவது 'வெறுமை' யாகத்தான் இருக்கிறது!

அவர் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமைக்குச் சென்றதே 'திடீர்' அடிப்படையில்தான்! அதுபோல, அதற்குப் பிறகு 'உயரே' சென்றதும் 'மிக வேகத்தில்தான்!

1963-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில், 'காமராசர் திட்டம்'—அவரை 'மேலே' அனுப்பியது! அதுவரையில், அவர் ஒரு தமிழகத்துக்காரராக மட்டுமே இருந்தார்!

1954 வரையில்கூட அவர் தமிழகத்துக்கு வெளியே அறிமுகமானது கிடையாது! அப்போது இருந்த இராசகோபாலாச்சாரியார் அமைச்சரவையை அப்புறப்படுத்தியதன்மூலம் பிரபலமானவர்தான் காமராசர்! அந்த நேரத்தில் அதற்காகக் காமராசர்மீது வெறுப்புக் கொண்ட அதே நேரு, 1963-ல் அவரை அழைத்து அனைத்திந்திய காங்கிரசுத் தலைமைப் பதவியைக் கொடுத்தது ஏன்' என்பதற்குப் பலரும் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள்; 'தமது பெயரை அவர், அரசியல் நோக்குடன் தயாரித்த ஒரு திட்டத்துக்கு கொடுத்துவியதால்தான, பிரதியுபகாரமாக நேரு—காங்கிரசுத் தலைவர் பதவியைக் காமராசருக்கு வழங்கினர்' என்று—பிற காலத்தில் ஒரு காரணம் கூறப்பட்டது; ஆனால், அது மட்டுமே ஒரு காரணமாகவும் இருக்கமுடியாது.

காமராசர், தமது முதல் தலைமை உரையைப் புவனேசுவரத்தில் ஆற்றுவதற்கு முனனரேயே, நேருவின் உடல்நிலையில் மாறுதல் தோன்றியது; அதிலிருந்து—அவரது கடைசி மூச்சு பிரிந்த இடைப்பட்ட ஐந்து மாதங்களிலும—காமராசரின் தலைமை, குழப்பமான வினவுகளைத்தான் உருவாக்கியது! திறமைக்கான அறிகுறிகள் எங்கோ ஒரு சமயம் தோன்றினலும், திறமைக் குறைவான பல நடப்புகள், அதை மங்கச் செய்தன!

இலாகா பொறுப்பில்லாத ஓர் அமைச்சர் பதவியை லால் பகதூர் சாஸ்திரிக்குத் தரப்படுவதற்கு ஒத்துழைத்ததை தவிர, நேருவின் காலத்தில் காமராசரின் தலைமையைப் பற்றி வேறு எதுவும் குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை!

இதற்குள்ளாகவே காங்கிரசுக்காரர்கள், காமராசர்மீது வெறுப்புக் காட்டத் தலைப்பட்டுவிட்டனர்! புதுடில்லிக்குப் போய்விட்டுத் திரும்பும் காங்கிரச மேலிடத்துத் தலைவர்களெல்லாம், காமராசரின் தலைமை செயல்நிறைச் சோம்பிக்கிடப்பதைப் பற்றிப் புகார் தெரிவிக்காமல் வந்தது கிடையாது! காமராசரின் 'பார்க்கலாம்' என்ற தாரக மந்திரம், அங்கே வருவோர் போவோருக்கு ஆரம்பத்திலேயே 'புளித்துப்' போய்விட்டது!—'காமராசரும் ஒரு சஞ்சீவையாதான்; வேறு ஒன்றுமில்லை' என்று சுருக்கமாக அவர்கள் விமர்சித்தார்கள்!

நேரு மறைந்து—அவரது இடத்துக்கு லால்பகதூர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, காமராசரின் தலைமைப் பதவியில் திடீரென்று ஒளி காணப்பட்டது! ஆனால் அதுவும், குறுகிய காலத்திற்குத்தான்—வந்த வேகத்திலேயே மறையவும் செய்தது!

காங்கிரசு மேலிடம்—காமராசர் தலைமை—ஆகிய இரண்டுமே மீண்டும் சோம்பிக் கிடக்கும் நிலைக்குத் திரும்பின!

கட்சி அலுவல்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன!

இதே சமயத்தில், சாஸ்திரிக்கும்—அவருக்கும் இடையே தோன்றிய பிளவும் வெளிக்குத் தெரிய ஆரம்பித்தது!

1964-ம் ஆண்டு துவங்கி இரண்டு ஆண்டுகள்—நாட்டின் பெரும் பகுதிகள்—வறட்சி, பஞ்சம், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், அதிருப்தி ஆகியவைகளில் சிக்கித் தவித்தன!

அந்த இரண்டு ஆண்டுகளில்—எந்தச் சமயத்திலும்—காங்கிரசு அரசோ அல்லது காங்கிரசுக் கட்சியோ, அந்தப் பாதகங்களுக்கு வழிமுறை காணக் காணத் தவறின!

அரசு செய்யத் தவறிய காரியத்தைக் காங்கிரசுக் கட்சியும் கண்டிக்கவில்லை! அரசுக்குப் பக்கபலமாக அப்போது ஆதரவினைத் தருவது எப்படி என்பதற்கான வழிமுறை களைக் காண்பதற்கும் முயலவில்லை!

1965-ம் ஆண்டில் நடைபெற்ற (தமிழகத்து) மொழிப் போராட்டத்தின்போதும் இதே கதைதான்!

வருமுன் உணரும் திறமையை, சாஸ்திரியோ—காமராசரோ பெற்றிருக்கவில்லை! அதிலும் குறிப்பாக ('தமிழர்' என்ற முறையில்)—காமராசரின் தலைமை, அப்போது பலத்த அதிர்ச்சிக்கு ஆளாக நேரிட்டது!

சென்னையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, காமராசர், கேரளத்தில் சுற்றுப்பயணம் நடத்திக் கொண்டிருந்தார்!

அங்கிருந்தபடி தமிழகத்திற்குப் போவதற்கு முயலாமல் அவர், நேரே டில்லிக்குத்தான் சென்றார்!

அதற்குப் பின்னரும் அடுத்தடுத்துக் காங்கிரசில் உருவான மொழிக் கொள்கை பற்றிய விவாதங்களில்—முடிவுகளில், காமராசரின் பங்கு திருப்தியளிக்கக்கூடிய வகையில் இருக்கவில்லை!

1965 சூலைத் திங்கள் வாக்கில் மிக வேகமாக வளர்ந்து வந்த கருத்துவேறுபாடுகளுக்கிடையிலும் லால்பகதூர் சாஸ்திரி, அதைவிட வேகமாக கீழே 'வீழ்ந்து' கொண்டிருந்த காமராசருக்கு—பெங்களூர் மாநாட்டில்—பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுத்தார்.

இதற்கு அப்போது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தவர் மொரார்ஜி தேசாய்!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

அநீதிப் பயணத்தில்

ஆட்சி மொழித் திருத்த மசோதா

முறையற்ற கொள்கைக்கு முதல்கட்ட வெற்றியாம்!

கட்சி வரம்பு மறைந்தது --- மக்களவை இரண்டாகப் பிரிந்தது!

நம்நாடு செய்தி நோக்கு

1963-ம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்துக்கான திருத்த மசோதாவும், மொழிக் கொள்கை பற்றிய தீர்மானமும், நாடாளுமன்ற மக்களவையில், முதல் கட்டமாக நிறைவேறியிருக்கிறது.

பொது விவாதம் முடிந்த அளவில் இனி—இன்றுமுதல், விளக்கமாக—ஆழ்ந்த முறையில், மசோதா பற்றிய வாக்குவாதங்கள் நடைபெற இருக்கின்றன!

மாற்றங்கள் திணிக்கப்பட்டு நேருவின் உறுதிமொழி மாசுபடுத்தப்பட்டிருக்கும் திருத்த மசோதாவின் முதல் வாக்கெடுப்பில், ஆதரவாக 224 வாக்குகளும், எதிராக 75 வாக்குகளும் பதிவாகியுள்ளன.

கட்சி வரம்புமுறைகளை உடைத்தெறிந்து—மக்களவையில், 'இந்தி பேசுவோர்' எனவும், 'இந்தி பேசாதோர்' எனவும் இரு பகுதியினராக உறுப்பினர்கள் பிரிந்து நின்று கருத்துக்களைச் சொல்லியிருப்பதும், கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி காங்கிரசு உறுப்பினர்கள் சிலர் வாக்களித்திருப்பதும், இந்தியத் துணைக்கண்டத்துப் பாராளுமன்ற வரலாற்றில் முக்கியத்துவம் பெறப்போகும் சம்பவங்களாக இருக்கின்றன.

சேத்கோவிந்த தாஸ் உட்பட மூன்று காங்கிரசு உறுப்பினர்கள், மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருக்கின்றனர்!

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி, மசோதாவுக்கு ஆதரவாக நின்றிருக்கிறது!

ஜனசங்கம், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய இரு அமைப்புகளும், எதிர்த் தரப்பில் வாக்களித்திருக்கின்றன!

பிரச்சினைக்கு மையப் புள்ளியாகவும், அனைவருடைய கவனத்துக்கும் உரியதாகவும் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம், கலப்படம் செய்யப்பட்டிருக்கும் இந்த மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருக்கிறது!

துவக்கம் முதல் விவாத நிகழ்ச்சிகளில் துடிதுடிப்புடன் செயல்பட்ட கேரளத்துப் புரட்சி சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஸ்ரீகண்டன் நாயர்,

'இந்தி ஆதிக்கம் ஒழிக'

என ஐந்து முறை முழக்கம் செய்துவிட்டு, தனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளிக்காத அவைத் தலைவரின் போக்குக்கு எதிராக வெளிநடப்புச் செய்திருக்கிறார்!

"இதுவரையில் எந்த மசோதாவுக்கும் இல்லை" என்று சொல்லும்படியாக முதல்கட்ட விவாதத்திற்கே மொழி மசோதா, 13-மணி நேரத்துக்கும் அதிகமாக எடுத்துக்கொண்டிருக்கிறது!

எந்த இல்லாத இந்தியை, 'நாடு முழுவதும் திணிக்கிறார்கள்' என்று இந்தி பேசாதோர் குற்றஞ் சுமத்துகிறார்களோ, அதே இந்தி, இப்போதுதான் சரித்திரத்திலேயே முதன் முறையாக, 'ஆட்சிமொழிக் கட்டில் ஏறுகிறது' என்று சவாண் பேசியிருப்பது, பாதிக்கப்படுபவர்களுக்கு—அவரையும் அறியாமல்—உதவி செய்திருக்கிறார் என்பது புலனாகிறது!

'இந்தியைப் புகுத்தப் பாடுபடுவோர்' என்றும், 'அதை எதிர்க்க முயற்சிப்போர்' என்றும்—இதுவரையில் காணப்படாத முறையில்—மக்களவை, கட்சி வரம்புகளைத் தூர ஒதுக்கிவைத்துவிட்டு, இரண்டு எதிரெதிர் அணிகளாகப் பிரிந்து நின்ற காட்சி, நேற்றைய நிகழ்ச்சிகளின் மூலம் தென்பட்டது!

ஜனசங்கக் கட்சிப் பேச்சாளர்களின் இந்தி ஆதரவு முழக்கங்களுக்கு, காங்கிரசு வரிசையிலிருந்து சிரிப்புடன் கூடிய ஆதரவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரசுப் பேச்சாளர்களின்—'இந்தி வேண்டும்' என்ற கருத்துக்கு, இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்த ச. சோ. கட்சியினர் ஒப்புதல் தந்திருக்கின்றனர்!

திராவிட முன்னேற்றக் கழகம், சில சுதந்தரா உறுப்பினர்கள், கம்யூனிஸ்டுகள் ஆகியோர் ஏறக்குறைய இந்தி பற்றி ஒரே குரல் கொடுத்திருக்கின்றனர்!

வங்காளம் வழங்கும் மேலும் ஒரு விநோதமாக—அந்த மாநிலத்தச் சில காங்கிரசு உறுப்பினர்கள்—'இந்தி வேண்டாம்' என்று பேசினர்!

ஒரு மசோதாவுக்கு எதிராக அளிக்கப்படும் வாக்குகளிலும் தனித் தனி நோக்கங்கள் பொதிந்து காணப்படும் விசித்திரமும் நேற்றைய சம்பவத்தில் காணப்பட்டிருக்கிறது!

எதிர்ப்பு வாக்குகளில் ஜனசங்கமும், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியும் சேர்ந்திருக்கின்றன என்றாலும், அவைகளின் நோக்கங்களும், கழக எதிர்ப்புக்கான காரணங்களும், முற்றிலும் மாறுபட்டவை!

சங்கரி தொகுதி இடைத் தேர்தல் நிதிச்

சிறப்புக் கூட்டம்

17-12-67 ஞாயிறு காலை 9-மணிக்கு

சேலம் நேரு கலை அரங்கில்

★

ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.

அவர்கள் தலைமையில்

அறிஞர் அண்ணா

இரா. நெடுஞ்செழியன் மு. கருணாநிதி

என். வி. நடராசன் எம்.எல்.சி. முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி.

மற்றும் பலர்

சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

நன்கொடை : ரூ. 1.] —தேர்தல் நிதிக் குழு

நில நடுக்கம் வாங்கிய காவு!

சதாரா மாவட்டத்தில் மட்டும் 179-பேர் சாவு

பம்பாய், டிச. 13—

நில நடுக்கத்தின் விளைவாக மாண்டவர்கள் தொகை 179 ஆக உயர்ந்துள்ளது; மொத்தம் 2,063-பேர் காயமடைந்திருக்கின்றனர்; இவர்களில் 100-பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சதாரா மாவட்டத்தில் மட்டும் ஏற்பட்ட சேதமாகும் இது. கொய்னா மின்சார நிலையப் பகுதியில் ஏற்பட்ட உயிர்ச் சேத எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.

சதாரா மாவட்டத்தில் 611 கிராமங்கள் பாதிக்கப்பட்டு சுமார் 10,000 வீடுகள் நாசமாயின!

ரூ. 2-கோடி அளவுக்குப் பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது!

கலியுகக் கர்ணன்!

ஐந்து ஆண்டுகளில் எட்டு கோடி ரூபாய் 'தர்மம்'!

வருமான வரியாக வசூலிக்கப்படவேண்டிய ரூ. 7.58 கோடி, இந்திய அரசினரால், கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூல் செய்யப்படாமல் இருந்து, 'வராத கடன்' என்று அழிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை, நாடாளுமன்ற மேலவையில் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

சவாணுக்கு இரா. செழியன் தந்த சரியான பதில்!

உள்துறை அமைச்சர் சவாண் :—

"எனக்கும்—தி. மு. க.-வுக்கும் நிறையக் கருத்துவேறுபாடுகள் உண்டு; ஆனால், தி.மு.க.-வினர் சிறந்த சனநாயகவாதிகள் என்பதில் எனக்குச் சந்தேகமேதும் இல்லை. எனவேதான் (இந்தி மொழி விஷயத்தில்) அவர்கள் மனம் மாறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

இரா. செழியன் :—

"நாங்கள் மற்றவர்களை மாற்றிவிடுவோம்!"

—மக்களவையில் ஆட்சி மொழி மசோதாமீதான பொது விவாதத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்ததாக, லால்பகதூர் சாஸ்திரி தாஷ்கண்டுக்குப் புறப்பட்டுச் சென்றபோது, காமராசரது தலைமைப் பதவி மேலும் அநேக 'கிழிசல்'களைப் பெற்றுவிட்டது! அமைச்சரவையிலிருந்து டி. டி. கிருஷ்ணமாச்சாரி வெளியேறியது—எரு உற்பத்திக் கொள்கை போன்ற விவகாரங்களினால், மிகவும் குன்றிப்போனார் காமராசர்!

லால்பகதூரை பின்பற்றிப் பதவிக்கு வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்த சமயத்தில் அவர், மீண்டும் 'வெளிச்சத்'துக்கு வந்தார்; ஆனால் அதுவும் தற்காலிகமாகத்தான் இருந்தது!

அவருக்கும்—இந்திராவுக்குமிடையே எழுந்த முரண்பாடு, அவருக்கோ—இந்திராவுக்கோ—கட்சிக்கோ—அல்லது நாட்டுக்கோ—யாருக்கும் நல்லதைக் கொடுக்கவில்லை!

"நேருவுக்குப் பின்னால், இந்தியாவில் கூட்டுத் தலைமைதான் தேவை—இருக்க முடியும்" என்று முதன்முதல் அறிவித்தவர் காமராசர்தான்!

ஆனால், அவரால் உருவாக்கப்பட்ட இரண்டு தலைமையமைச்சர்களிடமே ஒத்துப்போகும் தன்மையை—அனுசரித்துப் போகும் மனப்பான்மையை, காமராசரால் கடைபிடிக்க முடியவில்லை!

இதற்கு, அவரை ஆதரிக்கும் காங்கிரசிலேயே உள்ள சில தீவிர இடதுசாரிகள், ஒரு சமாதானம் சொல்லுவார்கள்—

"காமராசர் ஒரு உண்மை சோஷலிசவாதி; சோஷலிசக் கொள்கைகளைக் காங்கிரசு நிர்வாகங்கள் அடகு வைக்கும் மனப்போக்கில்தான் இயங்கிவருகின்றன; எனவேதான், இரண்டு தலைமையமைச்சர்களிடமும் காமராசருக்குக் கருத்து வேறுபாடு"

இப்படி ஒரு விளக்கம் தரப்படுகிறது; ஆனால், 'இதுவும் பொருந்தாததே' என மெய்ப்பிக்க முடியும்.

'உண்மை சோஷலிசவாதி' எனச் சொல்லப்படும் இதே காமராசர்தானே—சோஷலிசவாதிகளைக் காங்கிரசுக்கு அழைத்த அதே வாயினால்—ராம்கார் மன்னருக்கு வரவேற்புத் தந்து, கட்சி வலைக்குள் வீழ்த்தினார்?

அப்படி உண்மையிலேயே தலைமையமைச்சரிடம் கருத்து வேறுபாடு என்றால்கூட—காமராசரின் கடமை—அதனை, உள்ளது உள்ளபடி கட்சியின் அடுத்த வரிசையினரிடம் எடுத்துச் சென்று விளக்கி நீதி கோருவதுதானே?

இதை ஒரு சமயத்தில் கூடக் காமராசர் கடைபிடிக்கவில்லை!

'கட்சியின் கௌரவம், வெளி உலகினர் பார்வையில் குலைந்துவிடுமே' என்று சமாதானம் கூறலாம்—காமராசர்; ஆனால் தலைமையமைச்சருக்கும்—அவருக்குமிடையே வளர்ந்துள்ளதாகக் கருதப்படும் பிளவு மனப்பான்மைகள், கட்சியை அதைவிடச் சீரழிப்பதாக இருக்கிறதே!

புவனேசுவரத்திலிருந்து 'சங்லி' வரை, காமராசர்—தமது தலைமைக் காலத்தில் - இறங்குமுகத்தில் தான் பயணம் செய்திருக்கிறார்!

'அனைத்திந்தியத் தலைமை' எனும் அலை அடித்தபோது உயரே சென்றார்! அலை மறைந்தது--அவரும் கீழே வந்துவிட்டார்!

நேரு நினைவுக் கல்லூரி

அமைச்சர் நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டுகிறார்

திருச்சி மாவட்டம் புத்தனம்பட்டில் நிறுவப்படவிருக்கும் நேரு நினைவுக் கல்லூரிக்கு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த விழா, 15—12—67 மாலை 4-மணிக்கு திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.